அம்பராம்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி. F.சகர்பானு பைஜில் ஊராட்சி மன்றத் தலைவர்

பொருள் : மனைப்பிரிவு – நகர் – ஊரமைப்பு துறை – கோயம்புத்தூர் மாவட்டம் – பொள்ளாச்சி (தெற்கு) வட்டம் – அம்பராம்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் – நில அளவை எண்கள் 58/1D ல் பு.ஏ. 1.6925 ஏக்கரில் (6852.00 சதுர மீட்டர்) அமையும் உத்தேச மனைப் பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வரப்பெற்றது மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக

பார்வை : கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்புத்துறை இணை இயக்குனர் அவர்களின் உத்தரவு R.O.C No. CBEREGN / GNAOP702/2023/ 2023 TCP date : 10.11.2023

உத்திரவு

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், பொள்ளாச்சி (தெற்கு) ஊராட்சி ஒன்றியம், அம்பராம்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் நில அளவை எண்கள் 58/1D ல் பு.ஏ. 1.6925 ஏக்கரில் (6852.00 சதுர மீட்டர்) அமையும் உத்தேச மனைப் பிரிவிற்கு கோயம்புத்தூர் மாவட்ட நகர் ஊரமைப்பு துறை இணை இயக்குனர் அவர்களின் உத்திரவின் படி ம.வ.(கோ.மா) எண் 315/2023 என்று எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தொழில்நுட்ப அனுமதியில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும் அம்பராம்பாளையம் ஊராட்சியின் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டும் அம்பராம்பாளையம் ஊராட்சியின் தீர்மான எண் 228/24-25 நாள் 26.09.2024 ன் படியும் க.ச.எண். 58/1D ல் பு.ஏ. 1.6925 ஏக்கரில் (6852.00 சதுர மீட்டர்) அமையும் உத்தேச மனைப் பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி இதன் மூலம் உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

F. Sahaiba
தலைவர்
அம்பராம்பாளையம் ஊராட்சி,
பொள்ளாச்சி (தெற்கு)

26/9/2024

பெறுநர் :

திரு. M. ராஜேந்திரன்,
திரு. P. மாலையா,
9A, MSP டீச்சர் காலனி,
பாலகிருஷ்ணபுரம்,
திண்டுக்கல்.

Scanned with OKEN Scanner

நிபந்தனைகள்:

1. நகர் ஊரமைப்பு ஆணையர் கோயமுத்தூர் மற்றும் நகர் ஊரமைப்பு அலுவலகம் கோயமுத்தூர் அவர்களின் மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படுகிறது.

2. எக்காரணத்திற்காக வரைபடம் அங்கீகரிக்கப்பட்டதோ அக்காரணம் தவிர வேறு எந்த காரணத்திற்கும் உபயோகிக்க கூடாது.

3 மனைப்பிரிவு உரிமம் வழங்க அனுமதிக்கப்பட்ட கட்டணம் தவிர ஏதாவது கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டுமென அறிவித்தாலும் கட்டணம் குறைவாக வசூலிக்கப்பட்டதாக அறியப்பட்டாலும் அறிவிப்பு கிடைத்த ஏழு தினங்களுக்குள் குறிப்பிட்ட தொகையை செலுத்த வேண்டியது உரிமையாளரின் பொறுப்பாகும்.

4. மனைப்பிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டிடத்திற்கும் இவ்வூராட்சியில் அனுமதி பெற வேண்டும். கட்டிடப்பணி முடிவுற்றவுடன் வீட்டு வரி செலுத்தவும் வேண்டும்.

5 மத்திய மாநில அரசின் இதர துறைகளின் அனுமதி எந்த ஒரு நிலையிலும் தேவைபடின் அதனையும் பெற்று மனைப்பிரிவு அமைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

6 மேலே கண்ட நிபந்தனைகள் ஏதாவது அல்லது முழுவதும் மீறப்பட்டாலோ அல்லது அங்கீகரிக்கபட்ட வரைபடத்திலிருந்து மாறுபட்டு மனைப்பிரிவு அமைக்கப்பட்டாலோ உரிமையாளர் விதிகளின் படி நடவடிக்கைக்கு உட்படுத்த படுவதுடன் அபராதத்திற்கு உட்பட்டவராவார்.

7 மனைப்பிரிவு வரைபடத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன் மனைப்பிரிவு ஒப்புதல் பெற்ற இடத்தில் மனைப்பிரிவு தீர்மான எண்ணும் நாளும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் எவ்வித விடுதலின்றி மனைப பிரிவு நுழை வாயிலில் 6"X4" அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொது மக்கள் பார்வைக்கு பிரசூரிக்கப்பட வேண்டும்.

8 EWS மனைகள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளை ஒருங்கிணைக்கவோ மாற்றியமைக்கவோகூடாது.

9 வரைபடம் அங்கீகாரம் 1994-ம் வருடத்திய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் மற்றும் தமிழ்நாடு ஊரக மற்றும நகரமைப்பு சட்ட விதிகளுக்கு உட்பட்டதாகும்.

10 மேற்கண்ட நிபந்தனைகள் தவிர அவ்வபோது அரசினாலோ ஊராட்சி மன்றத்திலோ ஏற்படுத்தப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரைபடம் அங்கீகரிக்கப்படுகிறது.

11 நில உபயோக மாற்றத்திற்காக தொகை சந்தை மதிப்பில் 3% உரிய தலைப்பில் செலுத்தப்படவேண்டும்

12 பார்வையில் காணும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பொருந்தும்.

13 புதிய மனைப்பிரிவு அமைக்கப்பட்ட இடத்தில் ஊராட்சிக்கு தேவையான தார்சாலை பணிகள் தெருவிளக்கு வசதி மெயின் குடிநீர் பைப் லைன் வசதிகள் அனைத்தும் செய்து ஊராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

14 மேலே கண்ட நிபந்தனைகளில் எவையேனும் மீறப்பட்டதாக அறியப்பட்டால் அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும்.

F. Saravanan
தலைவர்
அமபராமபாளையம் ஊராட்சி
பொள்ளாச்சி தெற்கு
26/9/2024

Scanned with OKEN Scanner

அம்பராம்பாளையம் ஊராட்சி மன்ற தீர்மான நகல்

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற அம்பராம்பாளையம் ஊராட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி. F. சகர்பானு அவர்கள், அம்பராம்பாளையம் ஊராட்சி மன்ற தலைவர்

பொருள் : 6	தீர்மானம்
அம்பராம்பாளையம் ஊராட்சியில் க.ச.எண். 58/1D ல் பு.ஏ. 1.6925 ஏக்கரில் (6852.00 சதுர மீட்டர்) அமையும் உத்தேச மனைப் பிரிவிற்கான விண்ணப்பத்தினை ஏற்று நகர் ஊரமைப்புத் துறை இணை இயக்குனர் கோயம்புத்தூர் மண்டலம் அவர்களின் இணைய வழி விண்ணப்ப எண் GNAOP702 ன் படி மேற்கண்ட மனைப் பிரிவிற்கு ம.வ.(கோ.மா.) எண் : 315/2023 ன் படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்த மனைப்பிரிவில் அடிப்படை வசதிகள் செய்யப்பட்டும் ஊராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய பொது உபயோக இடம் சாலைகள் மற்றும் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்தின் பயன்பாட்டுக்கான இடம் ஆகியவற்றை சார் - பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பெற்ற பத்திர எண் 12701/2023 ன் படி ஊராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே க.ச.எண். 58/1D ல் R.O.C No. CBEREGN / GNAOP702/2023/ 2023 TCP date : 10.11.2023 ன்படி வழங்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அனுமதியில் 34 (முப்பத்து நான்கு) மனையிடங்கள் ம.வ.(கோ.ம.) எண் 315/2023 ன் படி வழங்கப்பட்டுள்ளது. எனவே க.ச.எண். 58/1D ல் பு.ஏ. 1.6925 ஏக்கரில் (6852.00 சதுர மீட்டர்) பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்ற அங்கீகாரம் வேண்டல்.	தீர்மான எண் 228/24-25 தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது.

/உண்மை நகல்/

இடம் : அம்பராம்பாளையம்

நாள் : 26.09.2024

F. Sakarban

தலைவர்

அம்பராம்பாளையம் ஊராட்சி,

பொள்ளாச்சி (தெற்கு)

26/9/2024

Scanned with OKEN Scanner